யா/யாழ் இந்துமகளிர் கல்லூரி

தமிழ்மொழியும் இலக்கியமும்

முதலாந் தவணைப் பரீட்சை - 2020

தரம் :- 09 நேரம் :- 2.00 மணித்தியாலம்

## பகுதி - I

- ❖ எல்லாவினாக்களுக்கும் விடைதருக
- ❖ மிகச் சரியானவிடையைத் தெரிவுசெய்துஅதன் கீழ்க் கோடிடுக

01. அரசனுக்குஉரியதுசெங்கோல் ஆட்சி. இங்குஅரசன்என்பதன் ஒத்தகருத்துச் சொல்
    1. சோழன் 2. அமைச்சன் 3. கொற்றவன் 4. இறைவன்

02. அச்சம் என்பதுமடமை. இங்குஅச்சம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
    1. கோபம் 2. துன்பம் 3. துனி 4. சிரிப்பு

03. அகத்தில் ஒளிதுலங்கிடவேண்டும். அகம் என்பதன் எதிர்ப்பதம்
    1. வளி 2. புறம் 3. ஆகாயம் 4. உள்ளம்

04. காட்டில் மரங்கள் செறிந்துகாணப்பட்டன. செறிவுஎன்பதன் எதிர்ப்பதம்
    1. ஐது 2. கூட்டம் 3. நிறைந்தது 4. உயர்ந்தது

05. மதியுடையவன் வெற்றியடைவான். இதில் மதிஎன்பது
    1. சந்திரன் 2. மாதம் 3. மதித்தல் 4. அறிவு

06. ஐம்பதாவதுஆண்டுநிறைவில் கொண்டாடப்படும் விழா
    1. மணிவிழா 2. அமுதவிழா 3. வெள்ளிவிழா 4. பொன்விழா

07. பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயராகஅமையும் சொல்
    1. முதலாளி 2. உருவம் 3. பற்பொடி 4. பெரும்பாலும்

08. பின்வருவனவற்றுள் ஆக்கப் பெயராகஅமையும் சொல்
    1. பிறிதொன்று 2. தனவந்தன் 3. காட்சி 4. நறும்புகை

09. ஓவியம் கண்ணனால் வரையப்பட்டது. இதில் இடம்பெறும் வினை
    1. செய்வினை 2. செயற்பாட்டுவினை 3. தன்வினை 4. பிறவினை

10. பின்வருவனவற்றுள் கூட்டுவினையாகஅமைவது
    1. கண்டுபிடி 2. பாட்டுப்பாடினான் 3. தோகைஆடினாள் 4. மகிழ்ந்தார்கள்

11. தந்தையைப் போன்றவன். இங்கு ஐ உருபுஉணர்த்துவது
    1. இரண்டாம் வேற்றுமை - ஒத்தல் பொருள்
    2. மூன்றாம் வேற்றுமை - கருவிப் பொருள்
    3. நான்காம் வேற்றுமை - உறவுப் பொருள்
    4. ஏழாம் வேற்றுமை - தற்கிழமைப் பொருள்

12. நாம் சுற்றுலாசெல்வோம். இங்குநாம் என்பது
    1. தன்மைப்பெயர் 2. முன்னிலைப்பெயர் 3. படர்க்கைப்பெயர் 4. எதுவும் இல்லை

13. மூன்று +கனிஎன்பதனைப் புணர்த்தினால்
    1. மூன்றுகனி 2. முதல்கனி 3. முகனி 4. முக்கனி

14. தமிழ் நெடுங்கணக்கில் உள்ளமுதலெழுத்துக்களின் எண்ணிக்கை
    1. 247 2. 30 3. 18 4. 12

15. நான்காம் வேற்றுமைகொடைப் பொருளில்அமைந்தவாக்கியம்
    1. பாண்டவர்களுக்குபகைவர் கௌரவர்
    2. இராமனுக்குத் தம்பி இலக்குவணன்
    3. நல்லாசிரியருக்குவிருதுகிடைத்தது
    4. அரசனுக்குஉரியதுமணிமகுடம்

16. பின்வரும் சொற்களில் வேறுபட்டசொல்லைத் தெரிவுசெய்க
    1. அரசு 2. கசடு 3. சோர் 4. களங்கம்

17. ஒருவர் தனதுஉண்மையானதோற்றத்தைபிறர் அறியாதவகையில் மறைத்திடும் வேற்றுருவம்
    1. விநோதஉடை 2. மாறுவேடம் 3. தலைமறைவு 4. வனவாசம்

18. அவர் தனதுசெயலுக்காகமிகவும் மனம் குமைந்தார். இதில் குமைந்தார் என்பதனைக் குறிக்கும் சொல்
    1. வருந்தினார் 2. மகிழ்ந்தார் 3. சிரித்தார் 4. பயந்தார்

19. மகளின் உண்மைக்கு…………………… கிடைத்தது. கிறிட்ட இடத்தில் இடம்பெறும் சொல்
    1. வெகுமானம் 2. சீதனம் 3. சம்பளம் 4. கூலி

20. "அப்பனேஎனக்குஅமுதனே" இங்கு'அப்பன்'என்பதன் எதிர்பாற் சொல்
    1. அம்மா 2. அம்மை 3. ஆச்சி 4. அப்பம்மா

21. மலைக்காட்டில் மழைபொழிந்தது. இவ்வாக்கியத்தின் எழுவாய்
    1. காடு 2. மலை 3. பொழிந்தது 4. மழை

22. குளிர்காற்று குளுகுளு எனவீசியது. இங்கு குளுகுளு என்பது
    1. இரட்டைக்கிளவி 2. இணைமொழி 3. அடுக்குத்தொடர் 4. அடுக்குத்தொடர்

23. பின்வருவனவற்றுள் இடவாகுபெயராகஅமைவது

1. ஊரில் மழை
2. ஊர்ப்பாடசாலை
3. ஊர் உறங்கியது
4. எனது ஊர் யாழ்ப்பாணம்

24. வீட்டுக்குவெள்ளைஅடித்தான். இது எவ்வகை ஆடு பெயர்
1. சினையாகுபெயர்
2. தொழிலாகுபெயர்
3. பொருளாகுபெயர்
4. குணவாகுபெயர்

25. பின்வருவனவற்றுள் செயற்படுபொருள் குன்றியவாக்கியமாகஅமைவது
1. பாட்டுப் பாடினான்
2. குளத்தில் நீராடினாள்
3. கல்வியைவிருப்புடன் கற்றான்
4. தோல்வியைஏற்றுக் கொண்டான்

26. ''என்னுள்ளேஎப்போதும் உன்னிக் கருக் கூட்டும் உணர்ச்சிகளைத் தெரிந்துள்ளாய்''
இங்குகருக்கூட்டும் என்பது
1. உருவாகும் 2. வருந்தும் 3. விரும்பும் 4. நினைக்கும்

27. ''அழுதபிள்ளைபால்குடிக்கும்''என்னும் பழமொழி கூறும் கருத்து
1. எதையும் ஆராய்ந்துசெய்தல்
2. வாலிபத் துணிவு
3. முயற்சிபயனளிக்கும்
4. திருப்பதியற்றமனம்

28. குதிரைசெலுத்துபவன் பாகன் என்பதுபோல,விமானம் செலுத்துபவன்
1. மீகாமன் 2. வலவன் 3. சாரதி 4. மாலுமி

29. பந்தியொன்றின் பண்புஅல்லாதது
1. தலைமைக் கருத்தைக் கொண்டிருத்தல்
2. வாசகரின் மனதில் எழக்கூடியவினாக்களுக்குவிடைதரக்கூடியவகையில் அமைந்திருத்தல்
3. எழுதியவிடயத்திற்குமுரணானஎழுதுதல்
4. நியாயத் தர்க்கத்தைக் கொண்டிருத்தல்

30. பின்வரும் வாக்கியங்களைஒழுங்குபடுத்திஒருபந்தியாக்குவதற்கானவைப்புமுறையைத் தெரிவுசெய்க

அ) அதனால் கவியரங்கம் அமைத்துஅடிக்கடிதமிழ்ப் புலவர்களைஅழைத்துப் போற்றினான்.

ஆ) பாண்டியமன்னன் தமிழ்சுவைபருகுவதைத் தனதுபொழுதுபோக்காக் கொண்டிருந்தான்

இ) அவர்களால் கவிதைகளாலேயேஆக்கவும் அழிக்கவும் முடியும் என்பதையும் அறிந்திருந்தான்.

ஈ) புலவர்கள் தெய்வத் தன்மைபெற்றவர்கள் என்பதைஅறிந்தவன்

உ) அவர்களுடையகவிநயத்தையும் கற்பனைத் திறனையும் செவிமருந்து இன்பக் கடலில் திளைப்பான்

1. அ, ஆ, இ,ஈ, உ
2. ஈ, உ, அ, ஆ, இ
3. ஆ,ஈ, இ, அ, உ
4. அ,ஈ, ஆ, இ, உ

(30 x 1 = 30புள்ளிகள்)

## பகுதிII

01. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரைஎழுதுக

(20புள்ளிகள்)

02. .

1. தாவரங்களின் முக்கியத்துவம்
2. மனிதவாழ்வில் தொற்றுநோய்கள்
3. ஒழுக்கம் உயர்வுதரும்
4. விஞ்ஞானவளர்ச்சியின் விளைவுகள்

(20புள்ளிகள்)

03. அகில இலங்கைரீதியானதமிழ்த்தினப் பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டஉமதுநண்பியைப் பாராட்டி 75 சொற்களுக்குக் குறையாமல் ஒருகடிதம் எழுதுக

(10புள்ளிகள்)

04. பின்வரும் கவிதைப் பகுதியைவாசித்துஅதன் கீழுள்ளவினாக்களுக்குவிடைதருக

உன் போன்றமாணவரை
உயர்த்துவதில் நான் என்றும்
கண்ணாய் இருந்து
கரைசேர்க்கமுயற்சிப்பேன்

நட்போடுபழகி
நயக்க இலக்கியத்தை
கற்பிப்பேன் அதைமிகவும்
கவனமாய் கேட்டிருப்பாய்

1. இக்கவிதையில் இடம்பெற்றுள்ளமரபுத் தொடர் ஒன்றைத் தருக?
2. தன்மைப் பெயர்ச் சொல் ஒன்றுதருக?
3. ஆசிரியர் கற்பித்தபாடம் யாது?
4. மாணவன் பாடவேளையில் எவ்வாறுநடந்துகொள்வான்?

(8 புள்ளிகள்)

05. பின்வரும் யாரால்? யாருக்கு? எச்சந்தர்ப்பத்தில் என்பதனைக் குறிப்பிடுக

1. நீஉலகம் தெரியாதவன்,கலிபாஎன்னபார்த்துக் கொண்டா இருக்கிறார்?
2. முன்பு இடி இடித்தது, இப்போதுமழைபெய்கிறது
3. ஏன் என்னைமுறைத்துப் பார்க்கிறாய்,என் அழகைநீ இரசிக்கிறாயா?

(2x3=6புள்ளிகள்)

06. பின்வரும் சொற்களைவைத்துகருத்துப்புலப்படவாக்கியம் அமைக்குக

1. மாறுவேடம்
2. சீதனம்
3. தாழ்த்தும் எண்ணங்கள்
4. அர்ப்பணிப்பு
5. அல்லும் பகலும்

(5 x 2 = 10புள்ளிகள்)

07. பின்வரும் வினாக்களுக்குசரியானவிடைதருக
1. கலீபாஉமர்(றழி) சிறந்ததலைவர் என்பதற்கானஆதாரங்கள் இரண்டுதருக
2. ஒருசின்னஞ்சிறுபூச்சிஎன்றகதையாரால் எழுதப்பட்டது?
3. நாட்டார் கதைகளில் உழைக்கும் குடும்பங்களின் சீதனப் பொருட்கள் எவை?
4. கனகாம்பரம் ‘அழகு’என்பதற்குக் கொடுக்கும் விளக்கம் யாது?
5. சிவனொளிபாதமலைசெல்லும் வழியில் காணப்படும் பேராறுயாது?

(5 x 2 = 10புள்ளிகள்)

08. வழுநீக்கிஎழுதுக
வலிநெடுங்கிலும் அழகியஆருகள்,குழங்கள்,சோனைகள்,விலைநிலங்கள் என்பவற்றைக் கண்டேன்.

(6 x 1 = 6புள்ளிகள்)